
## திராவிடத்தால் வாழ்கிறோம்

799

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

104

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ஜி.எம்.ஷா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# ஜி.எம்.ஷா ‘தென்முனைக் கழகத்தின் அரண்!’

1957-ஆம் ஆண்டு நவம்பர் மாதம். கன்னியாகுமரி மாவட்டக் கழக மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கவனத்தை ஈர்த்தார் 22 வயதான இளைஞர் ஒருவர். அவர், அந்த மாநாட்டின் தொண்டர் படைத் துணைத் தலைவராக இருந்த ஷா. மாநாட்டு ஊர்வலத்தின் முன்னால், குதிரை மீது அமர்ந்து கழகக் கொடியை, கம்பீரமாக ஏந்திச் சென்றவர்.

அன்று அவரது பணிகளைப் பார்த்து, அண்ணா அருகில் அழைத்துப் பாராட்டிச் சென்ற, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு அவர். ஜி.எம்.ஷா என்றால், தென்முனைக் கழகத்தினர் நெஞ்சங்களில் நிறைபவர்.

கன்னியாகுமரி மாவட்டம், சூரங்குடி என்ற சிற்றூரில், 1935-ஆம் ஆண்டு, நவம்பர் 23-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் குலாம் முகைதீன் - பாத்திமா பீவீ ஆகியோர். தந்தையார் குலாம் முகைதீன், அந்த காலத்திலேயே மோட்டார் சர்வீஸ் நிறுவனம் நடத்தி வந்தவர் என்பதால், ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தார். அந்தக் குடும்பத்தில் இருந்து, அரசியல் ஈடுபாடு கொண்டவராக வளர்ந்தவர் ஷா.

திராவிட இயக்கத்தில் கொண்டிருந்த ஈடுபாடு காரணமாக, 1949-ஆம் ஆண்டு கோட்டாறு டி.வி.டி. உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, மாவட்ட மாணவர் சங்கங்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒருமுறை, தனது வகுப்பாசிரியர் வராததால், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் நூல்களை வகுப்பறையில் வைத்துப் படித்துள்ளார். அதைப் பார்த்த சங்கரலிங்கம் என்ற ஆசிரியர் ஜி.எம். ஷாவைக் கடுமையாகத் திட்டி, புத்தகங்களைப் பறித்துக் கொண்டு, வகுப்பை விட்டு வெளியேற்றியுள்ளார். காங்கிரஸ் பேரியக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த அந்த ஆசிரியர், பின்னாட்களில் கழகத்தில் இணைந்து மாநிலங்களவை உறுப்பினராக, ஜி.எம். ஷாவுடன் இணைந்து செயல்பட்டவர்.

### எல்லைப் போரில் பட்ட காயம்

1954-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் எல்லைப் போராட்டம் வலுப்பெற்றிருந்தது. கொச்சி சமஸ்தானத்தில் இருந்த தமிழ்பேசும் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என, நாகர்கோவில் பகுதிகளில் போராட்டம் வலிமையாக நடைபெற்றது. துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்த நிலையில், அதற்குக் கண்டனம் தெரிவித்து, காந்திராமன் என்கிற தலைவர் உண்ணாவிரதம் இருந்தார். அவருக்கு ஆதரவு தெரிவிக்க மாணவர் சங்கத் தலைவரான ஷா தலைமையில், மாணவர்கள் திரண்டு சென்ற நிலையில், அன்றைய கொச்சி சமஸ்தான காவல்துறையால் கடும் தாக்குதலுக்கு ஆளானார்.

ஷா அவர்களின் கழக ஈடுபாடு தான் 1957-ஆம் ஆண்டில், மாவட்டக் கழக மாநாட்டின் தொண்டர் படைத் துணைத் தலைவராக அவரை உயர்த்தியது. அப்போதைய கால கட்டத்தில், மாநாடுகளில் பார்வையாளர்கள் அமர நாற்காலிகள் போடும் வழக்கம் இல்லை. தரையில் அமர்ந்துதான் கவனிப்பார்கள். அப்படி, அந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கடுமையான மழை பெய்துள்ளது. மாநாட்டுப் பந்தலின் கீழே அமர்ந்து கருத்துரைகளைக் கேட்க பார்வையாளர்கள் சிரமப்பட்டுள்ளனர்.

தொண்டர் படையினர் மிகக் கடுமையாகப் பாடுபட்டு, மழைநீர் பந்தலின் உள்ளே புகுந்துவிடாமலும், மக்கள் பந்தலுக்கு வெளியே செல்லாமலும் பார்த்துக் கொண்டனர்.

இதனை மேடையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா, மேடையைவிட்டு இறங்கும்போது தொண்டர் படைத் தலைவர் எஸ்.பி.அப்பன் அவர்களையும், ஜி.எம். ஷா அவர்களையும் முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டியிருக்கிறார்.

### மாவட்டச் செயலாளர்

1959-ஆம் ஆண்டு மார்ச் மாதம், ‘மதுரை’ முத்து ஆணையாளராக இருந்து நடத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள் தேர்தலில், மாவட்டச் செயலாளராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார் ஷா. இவர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்தபோதுதான் கழகம் முதன்முறையாக நாகர்கோவில் நகர்மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, நகராட்சியைக் கைப்பற்றியது.

> “2010-ஆம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு கலைஞர் விருதினை வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.”

1969-ஆம் ஆண்டில் நடைபெற்ற நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், கழகக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட டாக்டர் மத்தியாஸ் அவர்களை ஆதரித்து, தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, எதிரிகளின் கல்லடியில் சிக்கி, காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

1975-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற குமரி மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாட்டின் செயலாளராகப் பணியாற்றியவர். கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று, பலமுறை சிறை சென்ற ஜி.எம்.ஷா. 1976-ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசாவில் கைது செய்யப்பட்டு, பாளை மத்திய சிறையில் நான்கு மாதங்கள் இருந்தார்.

சிறையில் இருந்து வெளிவந்ததும் நாவலர், சாதிக் பாட்சா ஆகியோரை அழைத்து வந்து பொதுக்கூட்டம், கழகக் கொடியேற்று விழா என பல நிகழ்ச்சிகளை நடத்தி அனைத்து அரசியல் நெருக்கடிகளையும் தகர்த்தவர்.

1982-இல் தமிழ்நாட்டின் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய மண்டைக்காடு கலவரத்தின்போது, கழகத்தின் குரலாக கலைஞரின் வழிகாட்டுதல்களோடு, மத நல்லிணக்கத்துக்காக உடன் நின்றார். குன்றக்குடி அடிகளாரால் அமைக்கப்பட்ட ‘திருவருள் பேரவை’யில் உறுப்பினராக இருந்து செயல்பட்டவர்.

### மக்கள் பணியும் கழகப் பணியும்

ஷா அவர்கள், வடக்கு சூரங்குடி ஊராட்சி மன்றத் தலைவராக 30 ஆண்டுகள் இருந்தவர். அந்த அளவுக்கு மக்களின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்றவர். மூன்று முறை போட்டியின்றித் தேர்வானவர்.

1959-ஆம் ஆண்டிலேயே மாவட்டச் செயலாளராக இருந்த இவரை, 1993-ஆம் ஆண்டு கழகத்தின் உள்கட்சி நெருக்கடியின் போது மீண்டும் குமரி மாவட்டக் கழகப் பொறுப்புக் குழுத் தலைவராக நியமித்தார் கலைஞர். 1999-ஆம் ஆண்டில், டாக்டர் ஆல்பனின் மறைவுக்குப் பின், மாவட்டப் பொறுப்பாளராகப் பணித்தார் கலைஞர். பின்னர், குமரி மண்டலப் பொறுப்பாளராகவும் நியமித்தார்.

ஷா, கலைஞரின் தீவிரப் பற்றாளராக இருந்தவர். அதனால்தான் 2008-ஆம் ஆண்டில் கழகத்தின் தலைவராக கலைஞர் கடைசியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சித் தேர்தலின்போது, கழகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் ஆணையாளர் வாய்ப்பு ஷாவுக்கு அமைந்தது.

இவரது கொள்கைப் பிடிப்பினையும், கழகத்திற்கு உரமூட்டும் உழைப்பினையும் பாராட்டிடும் வகையில், தலைமைக் கழகத்தின் சார்பில் 2010-ஆம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு கலைஞர் விருதினை வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.

இவரது கழகப் பற்றினைப் போலவே, குடும்ப உறுப்பினர்களையும் கழக உணர்வுடனே வளர்த்த ஷா அவர்கள், 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, ஏப்ரல் 2-ஆம் தேதி உடல்நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார். அவரது படத்திறப்பு நிகழ்ச்சியை, இன்றைய கழகத் தலைவர் தலைமையில், பெரும் பொதுக்கூட்டமாக நடத்தியது மாவட்டக் கழகம். அப்போது பேசிய தலைவர், ‘தென்பகுதி தி.மு.க.-வின் அரணாக இருந்தார்’ எனப் புகழாரம் செலுத்தினார். அந்த அரண் இன்றைய நாகர்கோவில் மாவட்டக் கழகத்துக்கும் என்றென்றைக்கும் துணை நிற்கும்.

...துடிக்கும்

## அண்ணாவின் நீட்சி!

‘வக்ஃப் சட்டத் திருத்த மசோதா’வை, கடுமையான எதிர்ப்புக்கிடையிலும் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்குதேசம், நிதீஷ்குமாரின் ஐக்கிய ஜனதாதளம் ஆகியவற்றின் ஆதரவுடன் நிறைவேற்றியிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் ஒன்றிய அரசுக்கு எதிராக, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, நாடாளுமன்றத்தில் உரத்து முழங்கிய கொள்கை முழக்கம் அகில இந்திய அளவில் பேசுபொருளானது.

அதுதொடர்பாக, கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் சமூக வலைத்தளத்தில் இட்ட பதிவில், “பா.ஜ.க. அரசு இழைக்கும் துரோகத்தைச் சுட்டிக்காட்டியது மட்டுமல்லாமல், ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் கிரண் ரிஜ்ஜு பொய்யாகப் பேசுகிறார்” என்பதை, நேருக்கு நேராக எடுத்துரைத்த ஆ.ராசா அண்ணனின் துணிச்சலான சொற்கள், கலைஞர் சொன்ன ‘தகத்தகாய சூரியனாக’ ஒளிர்ந்தது.

‘காக் அண்ட் புல் ஸ்டோரி’ (Cock and Bull story) என்று அவர் பயன்படுத்திய மரபுத்தொடர் (idiom), அந்த அமைச்சரை மட்டுமல்ல, ‘ஒட்டுமொத்த ஒன்றிய பா.ஜ.க. அரசே பொய் மூட்டைதான்’ என்பதைத் தோலுரித்துக் காட்டியது. Cock என்பதும் Bull என்பதும் இங்கிலாந்தின் பக்கிங்ஹாம்ஷயரின் வர்த்தகப் பகுதியான ஸ்டோனி ஸ்டார்ட்ஃபோர்டில் உள்ள இரண்டு விடுதிகள். இரண்டிலும் தங்குபவர்களை ஈர்க்கவும், அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், அந்தக் காலத்தில் போட்டி போட்டு அவிழ்த்துவிடப்படும் கதைகளைத்தான் ‘காக் அண்ட் புல் ஸ்டோரி’ (Cock and Bull story) என்று சொல்வார்கள். கிரண் ரிஜ்ஜுவைப் போலவே உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் கதை விட்டார்.

கதைவிடும் விடுதியைப் போல, ஜனநாயகத்தின் உயர்ந்த அமைப்பான நாடாளுமன்றத்தை பா.ஜ.க. நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை அழுத்தம் திருத்தமாக சொன்ன அண்ணன் ஆ.ராசா, ‘நான் சொல்வது தவறென்று நிரூபியுங்கள். நான் ராஜினாமா செய்து விடுகிறேன்’ என்று அறைகூவல் விடுத்தபோது, அது அண்ணனின் குரலாக மட்டுமல்ல, அண்ணாவின் நீட்சியாகவும் ஒலித்தது.

ஆ.ராசா முஸ்லிம் அல்ல. ஆனால், இந்தியாவில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் மக்களின் நலனுக்காக - உரிமைக்காக அவரது குரல் முழங்கியது. இதன் பெயர்தான் திராவிடம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





சு.நடராஜன்

### தலைவருக்குத் தங்க வாழ்த்து!

1989-ஆம் ஆண்டு, ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற இன்றைய கழகத் தலைவர், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் அவரை நேரில் சந்தித்து, எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்து புகைப்படம் ஒன்றையும் எடுத்துக்கொண்டேன். இன்றைக்கும் அதனை, நினைவாக வைத்துப் பாதுகாத்து வருகிறேன்.

**- சு.நடராஜன்,**
**பகுதிப் பிரதிநிதி, 128-வது வட்டம்,**
**விருகம்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மலரும் நினைவுகள் — நூலகம் / ம்லவுருக

### சினங்கொண்ட அண்ணா!

1958-ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னை வந்த நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டியதற்காக தி.மு.க.வினர் பலர் கைது செய்யப்பட்டனர். காரில் சென்று கொண்டிருந்த போது பின் தொடர்ந்து சென்று, கலைஞரைக் கைது செய்தது காவல்துறை. அவருடைய கார் ஓட்டுநர் ரங்கன் என்பவரும் கைது செய்யப்பட்டார். “கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பார்களே... அதுபோல கருணாநிதி வீட்டு கார் டிரைவரும் சர்க்காருக்கு அச்ச மூட்டுகிறார். இப்படி அஞ்சிச் சாவதை விட, ஒரு முழக்கயிறு கிடைக்கவில்லையா?” என்று கடற்கரைக் கூட்டத்தில் சினங்கொண்டு பேசினார் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131